I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No.72/2022 நாள் : 25.06.2025 வா.சா.1– திருமதி. அனி ஜெபராணி.</u>

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் வரியோர் வழக்காக ஏற்றுக் கொள்ளச் சொல்லி தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். என் தகப்பனார் பெயர் சுவிதன் ஞானமாணிக்கம். என் தாயார் பெயர் கோயில் எஸ்தர். என் தாயாருக்கும், என் தகப்பனாருக்கும் திருமணமானதற்கான திருமண பதிவுச் சான்றிதழ் உள்ளது. அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கிற்காக அதை தாக்கல் செய்திருப்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயார் எனக்கு 8 அல்லது 9 வயதிருக்கும்போது இறந்துவிட்டார். என் தாயார் இறந்தபிறகு 1ம் பிரதிவாதிதான் என்னை வளர்த்தார் என்றால் என் தகப்பனார்தான் வளர்த்தார். என் தாயார் இறந்தபிறகு என் தகப்பனாருடன் 1ம் பிரதிவாதி நான் சிறு வயதிலிருக்கும்போதே சேர்ந்து கொண்டார். நானும், என் தகப்பனாரும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் ஒன்றாக இருக்கும்போது 1ம் பிரதிவாதிதான் எங்களுக்கு சமைத்துப் போட்டார். அதனால் 1ம் பிரதிவாதி என்னையும் கவனித்துக் கொண்டார் என்றால் சரிதான். என் தாயாரிடமிருந்து என் தகப்பனார் சட்டப்படி விவாகரத்து பெற்றுக் கொண்டார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் என் தாயார்மீது IDOP.No.92/1983 என்ற வழக்கை விவாகரத்திற்காக திருநெல்வேலி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அதில் 29.08.1983–ல் என் தகப்பனார் கேட்டப்படி தீர்ப்பிடப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பின்னிட்டு ஒரு வருடம் கழித்து என் தகப்பனாருக்கும், 1ம் பிரதிவாதிக்கும் 26.09.1984–ல் திருமணம் நடந்தது என்றால் CSI கிறிஸ்துவ நாடார் சமுதாயத்தில் 2வது

திருமணம் தேவாலயத்தில் பதிவு செய்யமாட்டார்கள். எனக்கு கிறிஸ்துவ திருமண சட்டம் பற்றி ஓரளவு தெரியும். கிறிஸ்துவ திருமண சட்டப்படி முதல் மனைவியிடமிருந்து விவாகரத்து பெற்றாலோ அல்லது முதல் மனைவி இறந்துவிட்டாலோ கணவன் 2வது திருமணம் செய்து கொள்ள தடை இல்லை என்றால் சரிதான். என் தகப்பனாரை 1ம் பிரதிவாதி திருமணம் செய்தது தெரிந்துவிடும் என்பதால்தான் என் தாயாரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கும், என் தகப்பனாருக்கும் சட்டப்படி திருமணம் நடந்திருப்பதால் அவர்களுக்கு 2, 3 பிரதிவாதிகளும் சட்டப்பூர்வமான வாரிசுகள் என்றால் சரியல்ல. 1979–லேயே மேற்படி வழக்கை என் தகப்பனார் தாக்கல் செய்வதற்கு முன்பாகவே என் தாயார் என்னை அழைத்துக் கொண்டு அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. நான் அப்போது குழந்தை. என் தகப்பனாருக்கு நான்மட்டுமே வாரிசு என்று நான் கேட்டுள்ள பரிகாரம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. அந்த ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை நிபுணரின் கருத்துரைக்காக அனுப்புவதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் நீதிமன்ற உத்தரவிற்கு கட்டுப்படுகிறேன். சுப்பிரமணியபுரத்தைச் சார்ந்த பால்துரை என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. மறவன்மடத்தைச் சார்ந்த பால்மணி கிரேஸ் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. தூத்துக்குடியில் ஆசிரியர் காலனியைச் சார்ந்த ராமன் குமாரர் கணேசன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. புதுக்கோட்டையில் பத்திர எழுத்தர் கிராஸ்பெல் ராஜ் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. 15.04.2001–ல் நான் ரூபாய் 40 ஆயிரம் என் தகப்பனாரிடமிருந்து பெற்றுக் கொண்டு சொத்துக்கள்

குறித்து என் உரிமையை என் தகப்பனாருக்கு விடுதலை செய்து கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அந்த பத்திரத்தில் மனப்பூர்வமாக கையொப்பமிட்டுவிட்டு இந்த வழக்கிற்காக அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரப்படி எனக்குரிய முழு உரிமையை விடுதலை செய்து கொடுத்துவிட்டு தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. அதன் பிறகு என் தகப்பனாரின் சட்டப்படியான வாரிசுகள் என்ற முறையில் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஏற்படுத்திக் கொண்ட செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படியானது என்றால் சரியல்ல. அதை இல்லா நிலையானது என்று விளம்புகை செய்ய பரிகாரம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்தவரையில் என் உரிமை முழுமையாக அற்றுப்போய்விட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்யும்போது பாகப்பிரிவினை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். நான் கேட்டுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் கூட்டாக அனுபவித்து வருவதாக காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அதனால் நான் கேட்டுள்ள சுவாதீன பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கொடுத்த சட்ட அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு கொடுத்தார்கள். எனக்கு 21.03.2001–ல் திருமணமானது. எனக்கு திருமணமான ஒரு மாதத்தில் மேற்படி விடுதலை பத்திரத்தை என் தகப்பனாருக்கு எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. ஆகவே தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.06.25 18:48:30 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.